முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 30/2022

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் நாள் பி.த.சா.1–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமலிங்கம் | வயது | : | 61 |
| தந்தை/கணவர் பெயர் | : | முத்தையபிள்ளை | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு 2 அண்ணன்கள், 1 அக்கா. எனது அண்ணன் நடராஜன் ஜெயிலில் வார்ட்டனாக இருந்து ஓய்வுபெற்று இறந்துவிட்டார். 2ஆவது அண்ணன் என்.எல்,சியில் ஆப்பரேட்டராக வேலை செய்து ஓய்வு பெற்று கடலூரில் இருக்கிறார். நான் விவசாயம் செய்கிறேன். வழக்கு சொத்தின் முகவரி 42 ஏ/2, ரெட்டியார் காலனி, குறிஞ்சிப்பாடி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் லெட்டரில் நடராஜன் என்றும் அவர் முகவரி 42 ஏ/2 ரெட்டியார் காலனி, என்று உள்ளது என்றால் ஆமாம், ஆனால் அவர் சென்டல் ஜெயிலிரும், கிளை சிறையிலும் அடிக்கடி பணிமாற்றம் செய்வார்கள், அதனால் நிரந்தர முகவரிக்காக அவர் குறிஞ்சிப்பாடி முகவரியை தான் கொடுத்து வைத்திருந்தார். அந்த லெட்டர் Ex. A23 கேஸ் பில் வழகக்கு சொத்து முகவரில் உள்ளது என்றால் கடலூர் கேப்பர் மலையில் பணி செய்யும் இடத்திலும் இருப்பார். குறிஞ்சிப்பாடியிலும் இருப்பார், அவர்கள் பிள்ளைகள் என் அம்மாவின் கட்டுப்பாட்டுட்டில் இருப்பார்கள். கேஸ் பில் Ex.A24.

வங்கி காசோலை புத்தகம் Ex. A25. அவர் அடிக்கடி பணிஇடம் மாறுதல் ஆவதால் நிரந்தர முகவரியாக குறிஞ்சிப்பாடி முகவரியை கொடுத்திருந்தார். அவர் பிள்ளைகள் தான் குறிஞ்சிப்பாடியில் இருந்து படித்தார்கள். நான் சொல்வது போல் அவர் மாறி மாறி குடியிருக்கவில்லை என்பதும், அவர் வேலையை மட்டும் தான் கடலூரில் செய்தார் என்பதும் வழக்கு சொத்தில் தான் நிரந்தரமாக குடியிருந்தார் என்பதும் சரியல்ல. என் அம்மா, என் மனைவி, மகள் ஆகியோர்கள் தான் குறிஞ்சிப்பாடியில் 1994 ல் எனக்கு திருமணம் ஆனது முதல் குடியிருக்கிறோம். வாதி தான் 1994 ல் குறிஞ்சிப்பாடியில் வழக்கு சொத்தில் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. 15.01.1997 ல் என் மகள் இறந்தது அந்த வீட்டில் தான். அதற்கான இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளது. நான் என் அக்காவின் சொந்த வீடு என்பதால் தான் நான் தான் அந்த முகவரியை கொடுத்து இறப்பு சான்றிதழ் பெற்றேன் என்றால் சரியல்ல. எனது ஓட்டுநர் உரிமமும் அந்த முகவரியில் தான் உள்ளது. என் அண்ணன் என்,எல்.சியில் வேலை செய்வதால் என் அண்ணன் தான் என் அம்மாவின் மருத்துவ செலவுகளை பார்த்துக்கொண்டார் என்றால் 10 சதவீதம் மட்டும் தான் என்.எல்.சி மூலம் அவர் பார்த்துக்கொண்டார். மற்ற செலவுகளை நான் தான் பார்த்துக்கொண்டேன். என் அம்மா 10 ஏக்கர் நிலத்தின் அடிப்படையில் தான் என் அண்ணன் என்.எல்சிக்கு வேலைக்கு சென்றார். நான் வழக்குரையில் என் தாயார் சுப்பமாளுக்கு தொண்டையில் புற்று நோய் ஏற்பட்டது என்றும், மேற்படி ஆஸ்பத்திரி செலவுகளை யாரும் மேற்கொள்ளாத நிலையில் 1 , 2 பிரதிவாதிகள் சென்னை ராமச்சந்திரா, பாண்டி, ஜிப்மர், திருநெல்வேலி அரசு மருத்துவமனை, சென்னை மியாட் மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் சேர்த்து சுமார் 5 லட்சம் வரை மருத்துவ செலவுகள் செய்தனர் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

என்.எல்.சியில் குறிப்பிட்ட செலவுகளை மட்டும் தான் செய்வார்கள். போக்குவரத்து, பெட் செலவு கிடையாது. மீது செலவுகள் என் கை காசு தான். 04.02.2014 ல் என் அம்மாவிற்கு பக்கவாதம் வந்தது என்றால் இருக்கலாம் தேதி ஞாபகமில்லை. 3 முறை ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் 06.06.2019 தேதியில் என் அம்மா அவர் இடத்தினை விற்பனை செய்த ஆவணம். அது Ex. A26. என் அண்ணன் இறந்த பிறகு பங்கு கேட்டதால் வீட்டினை எனக்கு கொடுத்தார், பணத்தினை என் இன்னொரு அண்ணனுக்கு கொடுத்தார். இடத்தினை விற்றதில் எனக்கு பங்கு கொடுக்கவில்லை. நிலத்தினை விற்ற பணத்தினை வைத்து தான் என் மகளுக்கு திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. 30.10.2020 ல் என் மகளுக்கு திருமணம் நடந்தது. என் அண்ணன் 24.03.2019 ல் இறந்தார் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. என் அண்ணன் இறக்கும் வரை என் அம்மா என் அண்ணன் நடரடாஜனுடன் தான் இருந்தார் என்றால் இல்லை.என் அண்ணி கஸ்தூரி என்பவருக்கு முட்டு நீக்கி ஆப்பரேஷன் செய்ததால் உடல் நலம் பாதிக்கப்பட்ட என் அண்ணன் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் கவனிக்க முடியவில்லை என்ற காரணத்தினால் நான், என் அம்மா, என் மனைவி மூவரும் சேர்ந்த இறக்கும் வரை பார்த்துக்கொண்டோம். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் அண்ணன் இறப்பதற்கு முன்பே என் அண்ணி அவர் மகள் வீட்டிற்கு சென்றுவிட்டார். நான் என் அண்ணன் இறந்த பிறகு தான் வயதான என் அம்மாவை மிரட்டி உயில் எழுதி வாங்கிக்கொண்டு மேற்படி சொத்தினை விற்று கிரைய தொகையையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

அந்த பணத்தினை நான் வைத்துக்கொண்டு மற்ற மூவருக்கும் பாகம் கொடுக்கவில்லை என்பதும், சொத்தினை விற்பனை செய்த விவரம் மற்றவர்களுக்கு தெரியாது என்பதும் சரியல்ல. என் அம்மா உயில் எழுதும் போது வயது 80 இருக்கும். என் அம்மாவிற்கு அப்போது 92 வயது என்றால் இருக்கலாம். உரிய அறிவிப்பு இல்லாமல் வழக்கு சொத்திற்கான தானசெட்டில் மெண்ட்டை நீதிமன்றம் மூலம் ரத்து செய்தது செல்லாது என்றால் ரத்து செய்தது எல்லோருக்கும்தெரியும். எனக்கு எழுதி வைத்த உயில் செல்லாது என்றால் சரியல்ல. அடமானப்பத்திரமும் செல்லாது என்றால் சரியல்ல. யாரும் என் அம்மாவை பார்த்துக்கொள்ளவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் அம்மா 3 பிள்ளைகள் வீட்டிலும் மாறி, மாறி இருந்தார் என்றால் சரியல்ல, நானும் என் மனைவியும் தான் பார்த்துக்கொண்டோம். என் அம்மாவின் இறுதி சடங்கினை கூட என் அண்ணன் ஜகநாதன் பார்க்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். வாதியின் மனைவி நர்ஸ் என்றால் ஆமாம். ஆனால் அவர் வந்து என் அம்மாவை பார்த்து டிரிப்ஸ், ஊசி போட்டதாக சொல்வது தவறு. ஒரு நாள் கூட வரவில்லை. டிரிப்ஸ், ஊசி ஆகியவற்றை உள்ளூர் ஆட்களை வைத்து நான் தான் பார்த்துக்கொண்டேன். உயில் எழுதும் போது என் அம்மா நல்ல நிலையில் தான் இருந்தார்.